# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:** 75 **தேதி** :- 13.11.2015

## மாநில சங்க செய்திகள்

**TTA/JTO பயிற்சி பெறும் ஊழியர்களுக்கு TA முன்பணம்:**

TTA மற்றும் JTO தேர்வில் தேர்ச்சி பெற்ற ஊழியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு TA முன்பணம் வழங்கப்படவில்லை. மாநிலச் சங்கம் இப்பிரச்சனையை சென்ற வாரம் PGM அவர்களிடம் விவாதித்தது. பின்னர் மத்திய சங்கத்திடமும் இப்பிரச்சனையை கொண்டு சென்றது. மத்திய சங்கம் தலையிட்டு TA முன்பணம் வழங்கப்படவேண்டும் என்று கார்பரேட் அலுவலகத்தில் திரு புண்டே GM (CA) அவர்களிடம் வலியுறுத்தியது. அதன் அடிப்படையில் GM(CA) நமது PGM(F) அவர்களை தொடர்பு கொண்டு TA முன்பணம் வழங்கிடுமாறு கூறியுள்ளார்.

12.11.2015 அன்று மீண்டும் PGM (F) அவர்களை நமது மாநிலச் சங்கம் சந்தித்து TA முன்பணத்தை உடனடியாக வழங்கிட வேண்டும் என்று வலியுறுத்தியது. பின்னர் அதனை ஏற்றுக்கொண்ட PGM (F), TA முன்பணம் வழங்கிட ஒத்துக்கொண்டார்.

**GPF பட்டுவாடா:**

இந்த மாதம் GPF பட்டுவாடாவில் தாமதம் ஏற்பட்டது குறித்து PGM (F) அவர்களிடம் விவாதிக்கப்பட்டது. 13.11.2015 (இன்று) அல்லது திங்கள் கிழமை உறுதியாக GPF பட்டுவாடா செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

**வெளி மாநிலங்களில் பயிற்சி பெறுவோருக்கு Roaming வசதி:**

JTO பயிற்சிக்காக வெளி மாநிலங்களுக்கு சிலர் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களுக்கு Roaming வசதி கொடுக்கப்படாததால் நமது சர்வீஸ் செல் போன் இணைப்பில் அழைக்கவோ அல்லது அவர்கள் பேசவோ முடியவில்லை. இது குறித்து மாநில தலைமைப் பொது மேலாளர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். விரைவில் Roaming வசதி கொடுக்கப்படும் என்று நம்புகிறோம்.

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

மாநிலச் செயலர்